ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1978/31 - 2016 අගෝස්තු මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.04

1978/31 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வ/18/81/2007.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பிரதேச செயலகப் பிரிவில், ராகம்பத்துவ சிறு பிரிவில் இல. 168 பீ, திக்கோவிட்ட கிராம அலுவலர் பிரிவில் அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 3014 மற்றும் 2008.05.22 ஆம் திகதியிட்ட ஆரம்ப வரைபடத்தின் துண்டு இல. 2 மற்றும் 3 இல் குறிப்பிடப் பட்ட 0.6774 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட கீழ்காணும் விபரங்கள் கொண்ட காணித் துண்டுகள். (துண்டு இல. 1 ஆனது 3 மற்றும் 4 என திருத்தப்பட்டதுடன் துண்டு இல. 4 ஆனது கைவிடப்பட்ட சொத்தாகும்)

1. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: சீ. எஸ். தோட்டம் அல்லது கே. கே. மஹாதேவன் தோட்டம் அல்லது ஜாவாவின் தோட்டம்; விபரம்: தரிசு நிலம்; உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 0.0003 ஹெக்டயார்.

2. துண்டு இல. 3

காணியின் பெயர்: சீ. எஸ். தோட்டம் அல்லது கே. கே. மஹாதேவன் தோட்டம் அல்லது ஜாவாவின் தோட்டம்; விபரம்: வீட்டுத்தோட்டம் மற்றும் தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தேவேந்திரன் மஹாதேவன், 65/19, சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2; விஸ்தீரணம்: 0.6777 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2016, ஓகத்து 02.

8 - 528


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.